

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.2.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் வாழும் கைவினைப் பொக்கிஷம் விருதுகள் மற்றும் பூம்புகார் மாநில விருதுகள் பெற்ற கைவினைஞர்கள் தயாரித்த கலைநயம் மிக்க படைப்புகளை பார்வையிட்டார். உடன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை செயலாளர் திருமதி. வே. அமுதவல்லி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### சென்னை - மதுரை அரசு இசைக்கல்லூரியில் விரிவுரையாளர்கள் பணியிடங்கள்!

# 4 மாற்றுத் திறனாளிகளுக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, பிப். 19-**

**சென்னை மற்றும் மதுரை தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகளில் நான்கு மாற்றுதிறனாளிகளுக்கு விரிவுரையாளர்கள் பணியிடத்திற்கான பணி நியமன ஆணைகளை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.2.2025) தலைமைச் செயலகத்தில், கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் சென்னை மற்றும் மதுரை தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகளில் குரலிசை, வயலின், தவில் மற்றும் புல்லாங்குழல் ஆகிய பிரிவுகளில் நான்கு மாற்றுத்திறனாளிகளுக்கு விரிவுரையாளர்கள் பணியிடத்திற்கான பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாடு அரசின் கலை பண்பாட்டுத் துறையின் கீழ் சென்னை, மதுரை, திருவையாறு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இக்கல்லூரிகளில் குரலிசை, வயலின், வீணை, நாதஸ்வரம், தவில், பரதநாட்டியம் ஆகிய பிரிவுகளில் இளங்கலை பட்டப்படிப்புகளும் மேற்காண் பிரிவுகளுடன் புல்லாங்குழல், மிருதங்கம், கடம், கஞ்சிரா, மோர்சிங் ஆகிய இசைக்கருவிகள் மற்றும் நாட்டுப்புறக்கலையில் பட்டயப் படிப்புகளும், நட்டுவாங்கம் மற்றும் இசையாசிரியர் படிப்புகள் ஓராண்டு பட்டயப்படிப்புகளாகவும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டின் பாரம்பரிய இசை, நடனம் மற்றும் கருவியிசைகளை இளைய தலைமுறையினர் கற்று அக்கலைகளை உலகெங்கும் கொண்டு செல்லும் நோக்கத்தில் தமிழ்நாடு அரசு இசை கல்லூரிகள் தோற்றுவிக்கப்பட்டது. சென்னை, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் பல நாடுகளிலிருந்து இசை ஆர்வமிக்க மாணவர்கள் பயின்று வருகின்றனர். இசைக் கல்லூரிகளில் பயின்ற மாணவர்கள் இந்தியா மட்டுமன்றி வெளிநாடுகளில் தங்களது திறமைகளை வெளிப்படுத்துவதோடு கலை நிறுவனங்களையும் நடத்தி தாங்கள் பயின்ற கலைகளை இளைய தலைமுறையினருக்கு கற்றுத் தருகிறார்கள்.

தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகளில் காலியாகவுள்ள விரிவுரையாளர் பணியிடங்களில் நான்கு மாற்றுத்திறனாளிகளுக்கான பின்னடைவு பணியிடங்களை நிரப்புவதற்கு கலை பண்பாட்டுத் துறை சிறப்பு ஆட் சேர்ப்புத் தேர்வினை (Special Recruitment Drive) நடத்தியது. இத்தேர்வில் குரலிசைப் பிரிவில் கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. வி.கமல்ராஜ், வயலின் பிரிவில் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த இரா. அமிர்தராஜ் ஆகியோருக்கு சென்னை - அரசு இசைக் கல்லூரியிலும், தவில் பிரிவில் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த ஞா.குமார், புல்லாங்குழல் பிரிவில் கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த ரா.சுரேஷ் பாபு ஆகியோருக்கு மதுரை - அரசு இசைக் கல்லூரியிலும் விரிவுரையாளர்களாகத் தேர்வு செய்யப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வின்போது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் (மு.கூ.பொ) திருமதி. கவிதா ராமு ஆகியோர் உடனிருந்தனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–3 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற்று வருகிறது. இரண்டாம் கட்டமாக காஞ்சிபுரம் தெற்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 19.02.2025 புதன்கிழமை | காலை 9.00 மணி | காஞ்சிபுரம் தெற்கு | ப்ரியா மஹால், மல்லியங்கரணை செல்லும் வழி, உத்திரமேரூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 14-02-2025



### மும்மொழித் திட்டம் - இந்தியைத் திணிக்க மோடி அரசு முயற்சி!

# தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கை என்பது சட்டப்படியானது; ஒன்றிய அரசுக்கு எதிராக வரும் 23-ஆம் தேதி கண்டன ஆர்ப்பாட்டம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



*சென்னை, பிப்.19-*

*தமிழ்நாட்டில் தமிழ், ஆங்கிலம் என்ற இரு மொழிக்கொள்கை என்பது சட்டப்படியானதாகும். அதற்கு மாறாக தேசிய கல்விக் கொள்கை என்ற பெயரில் ஹிந்தியை ஏற்றுக் கொண்டால்தான் கல்விக்கான நிதியைத் தர முடியும் என்று கூறும் ஒன்றிய அரசை எதிர்த்து, வரும் 23-ஆம் தேதியன்று தமிழ்நாடெங்கும் கழக மாவட்டங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*அறிஞர் அண்ணா முதலமைச்சராக இருந்தபோது நிறைவேற்றப்பட்டு, அமுலில் இருக்கும் முப்பெரும் சட்டங்களில் ஒன்று, தமிழ்நாடு அரசின் இருமொழிக் கொள்கையாகும் (1968).*

*தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கை என்பது சட்டப்படியானதாகும்.*

*தமிழ் - ஆங்கிலம் இந்த இரு மொழிகளே தமிழ்நாட்டு அரசின் பாடத் திட்டத்தில் அமுலில் இருக்கும் என்பதை அரசின் முக்கிய கொள்கை முடிவாக்கி, அந்தத் தனிச் சட்டத்தையே அமுல்படுத்தி வருகிறார்கள். 57 ஆண்டுகளாக இந்த நிலை தொடர்கிறது.*

*அதற்குப் பிறகு வந்த அ.தி.மு.க. ஆட்சியிலும் சரி, தமிழ்நாட்டில் இடையில் ஏற்பட்ட குடியரசுத் தலைவர் (டில்லி) ஆட்சிகளிலும் (மூன்று முறை) சரி, இக்கொள்கையில் எந்த மாறுதலும் இன்றி தொடரவே செய்கிறது.*

*காரணம், தமிழ்நாட்டில் 1938 -1965 வரை ஆச்சாரியார் முதலமைச்சராக இருந்தபோதும், அதன் பின்னரும் கட்டாய ஹிந்தித் திணிப்பை எதிர்த்து, மாபெரும் மக்கள் கிளர்ச்சி வெடித்ததின் விளைவே இது.*

*மொழி உணர்வின் அடிப்படையில் பண்பாட்டுப் படையெடுப்பு - சமஸ்கிருத கலாச்சார ஆதிக்கத்தின் நுழைவு வாயில்தான், கட்டாய ஹிந்தி என்ற கருத்தின் அடிப்படையில், பல்வேறு காலகட்டங்களில், ஹிந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டங்கள், வெடித்துக் கிளம்பியதை நன்கு புரிந்தே இந்த நிலை வாய்ப்பாகியது.*

*1938-இல் தந்தை பெரியார் அவர்கள் தொடங்கிய ஹிந்தி எதிர்ப்புப் போராட்டம் என்ற வலுவான போராட்டம், கட்சிகளைக் கடந்தது; மொழி உரிமை, பண்பாட்டுப் பாதுகாப்புக்கு ஒரு காவல் அரணாகும். தமிழ் உணர்வாளர்களும் களம் கண்டனர்.*

**தேசிய கல்விக் கொள்கை என்ற பெயரால் ஹிந்தியைத் திணிப்பதா?**

*இப்போதுள்ள ஒன்றிய அரசு, "தேசிய கல்விக் கொள்கை" என்ற ஒரு புதிய கல்வித் திட்டத்தை 'திராவிட மாடல்' ஆட்சிமீது திணிக்க முயல்வதற்கு முழு முனைப்பின் முதல் கட்டமே இந்த மும்மொழியை கட்டாயமாக ஏற்கவேண்டும் என்ற ஆணவப் பேச்சு! ஒன்றிய அரசின் கல்வி அமைச்சர், வற்றா நதியான 'கல்வியில் சிறந்தோங்கிய தமிழ்நாடு' என்ற பெயரையும், புகழையும் கண்டு எரிச்சல் பட்டு, அதைத் தடுக்க தமிழ்நாட்டுக் கல்வி வளர்ச்சிக்குத் தரவேண்டிய முக்கிய தவணையான ரூ.2152 கோடியை தர மறுப்பதுடன், தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட நிதியை, வேறு சில மாநிலங்களுக்குக் கூடுதல் நிதியாகப் பிரித்து வழங்க ஏற்பாடுகள் நடந்துள்ளன என்ற செய்தியும் வெளியாகி உள்ளது.*

*இது குறித்து தமிழ்நாடே குமுறி கொந்தளித்து எழுந்துள்ளது!*

*தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளையும், நலன்களையும் ஒன்றிய அரசு 'தாரை' வார்த்துள்ளது. சில கொத்தடிமை மனப்போக்குள்ளவர்கள் தவிர, அனைவரும் இதனை வன்மையாகக் கண்டித்து குரல் கொடுக்கத் தயங்கவில்லை.*

*ஆழந்தெரியாமல் காலை விட்டவர் கதி அதோகதிதான். மின் வயரில் கை வைத்து விளையாடும் விளையாட்டுப் பிள்ளையைப் போல், ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் என்பவர், அகம்பாவத் தொனியில், "ஒன்றிய அரசின் மும்மொழிக் கொள்கையைத் தமிழ்நாடு ஏற்றே தீரவேண்டும் என்றும், அதனை மறுப்பது அரசமைப்புச் சட்ட விதிகளுக்கு எதிரானது" என்றும் கூறி, தமிழ்நாடு அரசினை மிரட்டிப் பார்க்கிறார்!*

**தமிழ்நாட்டைப் 'பிளாக் மெயில்' செய்ய முடியாது: முதலமைச்சர்**

*இதை நம்முடைய 'திராவிட மாடல்' ஆட்சியின் முதலமைச்சர், "தமிழ்நாட்டை இப்படி 'பிளாக் மெயில்' செய்வது - ஒருபோதும் செல்லாது - திமிர் முறிக்கத் தமிழ்நாடு தானே எழும் என்பதை ஒன்றிய அமைச்சர் புரிந்துகொள்ள வேண்டும்" என்று எச்சரித்தும் உள்ளார்!*

*"இந்திய அரசமைப்புச் சட்டத்தின் எந்த விதிப்படி ஒன்றிய அரசு, மாநில அரசுகள் மும்மொழித் திட்டத்தை கட்டாயமாக ஏற்க வேண்டும்; அதை ஏற்றால் மட்டுமே கல்வி நிதியை அளிக்க முடியும் என்பதற்கான ஆதார விதி என்ன?" என்று பொருத்தமான கேள்வியை எழுப்பி, ஒட்டுமொத்த 8 கோடி தமிழர்களின் உணர்வுகளை பிரதிபலித்துள்ளார்!*

*கல்வி முன்பு "மாநிலப் பட்டியலில்"தான் - அரசமைப்புச் சட்ட அட்டவணை ஏழாவது அட்டவணை அதிகாரங்கள் பற்றிய வரையறுப்பில்.*

*நெருக்கடி காலத்தில் - யாருக்கும் தெரியாமல் அதனை ஒத்திசைவுப் பட்டியலுக்கு (Concurrent List) மாற்றி, சட்டத் திருத்தம் செய்தனர்.*

*அது செல்லாது என்ற வழக்கும்கூட சென்னை உயர்நீதிமன்றத்தில் போடப்பட்டு, அவ்வழக்குப் பாதி விசாரிக்கப்பட்டு, நிலுவையில் உள்ளது!*

*சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் மட்டுமே ஹிந்தி!*

*தமிழ்நாட்டில் உள்ள சி.பி.எஸ்.இ. என்ற செகண்டரி பள்ளிகள், ஒன்றிய அரசு அதிகாரப்படி நடக்கின்றன.*

*மற்ற மெட்ரிகுலேசன், மற்ற அரசு உயர்நிலைப்பள்ளிகள், மாநில அரசின் கல்வித் திட்டத்தின்படிதான் நடைபெறும் - இருமொழித் திட்டம்தான் அங்கு.*

*பல ஆண்டுகளாக உள்ள இந்த நிலையை அறவே மாற்றி, புதிய "தேசியக் கல்விக் கொள்கை" என்ற திட்டத்தினால் தமிழ்நாடு அரசின், அதன் கொள்கை முடிவை மாற்ற முடியுமா? முடியாது!*

*அரசமைப்புச் சட்டத்தில் உள்ள ஒத்திசைவு (Concurrent) பட்டியலில் 25 ஆவது அயிட்டம் என்ன கூறுகிறது?*

*"Education, including technical education, medical education and universities, subject to the provisions of entries 63, 64, 65 and 66 of List I; vocational and technical training of labour".*

**கல்வி ஒத்திசைவுப் பட்டியலில்தான் உள்ளது!**

*இதன்படி கல்வி "ஒத்திசைவு"ப் பட்டியலில் உள்ளபோது, வலுக்கட்டாயமாக இதை ஒன்றியப் பட்டியலுக்கே மடைமாற்றம் செய்யும் நடைமுறைதானே இது?*

*இதை உரிமை மறக்காத எந்த மாநிலமாவது ஏற்க முடியுமா?*

*அதே அரசமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் உள்ள மொழிகளில், தேசிய மொழி என்ற தனித்தகுதி ஹிந்திக்கு, சமஸ்கிருதத்திற்கு அளிக்கவே இல்லை.*

*மாறாக, (Article 344(1), 351) படி தலைப்பில் வெறும் மொழிகள் 'Language' என்பதில் உள்ள 22 மொழிகளில் எதுவும் தேசிய என்ற தனித்தகுதியோ, அடைமொழி சிறப்பையோ பெற்ற மொழிகள் அல்ல.*

*மேலும், "கூட்டுறவுக் கூட்டாட்சி" (Cooperative Federalism) என்று ஒரு பக்கத்தில் பேசிக்கொண்டே, பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். ஒன்றிய அரசு இப்படி ஓர் உரிமைப் பறிப்பை நடத்த விரும்பினால், அது நியாயமா? முடியுமா?*

*ஏற்கெனவே நீறுபூத்த நெருப்பாக உள்ள ஹிந்தித் திணிப்பு எதிர்ப்புப் பிரச்சினையை ஒன்றிய கல்வித் துறை அமைச்சர் வேகமாக விசிறிவிடுவதின் விளைவு எதில் போய் முடியும்?*

*இதனை மாணவர்கள், பெற்றோர் ஏற்கவில்லை என்பதற்கான மக்கள் மன்றம் ஆர்ப்பரித்து கிளர்ந்தெழுவது கண்கூடாகத் தெரியும்.*

**கழக மாவட்டத் தலைநகரங்களில் கண்டன ஆர்ப்பாட்டம்!**

*வருகிற 23.2.2025 ஞாயிறு அன்று தமிழ்நாடு முழுவதும் அனைத்துக் கழக மாவட்டத் தலைநகரங்களிலும் திராவிடர் கழகம், ஒத்தக் கருத்துள்ளவர்களோடு இணைந்து, மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்களை முதல் கட்டமாக தொடங்கும்!*

*ஹிந்தித் திணிப்பாளர்கள் - ஆதிக்கவாதிகளான ஹிந்தி முகவர்களின் திமிரை முறித்துக் காட்டுவதற்குப் பெரும் உரிமை அறப்போரின் முதல் தொடக்கமாக அதுவே அமையும்.*

*தமிழ் இன உணர்வாளர்களே, மாநில உரிமையைக் காக்க அனைவரும் ஆயத்தமாவீர்!*

*இவ்வாறு கி.வீரமணி அவர்கள் தெரிவித்துள்ளார்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ்.என்.எம்.உபயதுல்லா
### பிப்ரவரி 19 (2023)



பள்ளிப் பருவத்திலேயே கழகப் பணியில் தன்னை இணைத்துக் கொண்ட இவர், 1962ஆம் ஆண்டு கலைஞர் தஞ்சை தொகுதியில் போட்டியிட்டபோது, சிறப்பாகப் பணியாற்றி தலைவர் கலைஞரின் அன்பைப் பெற்றவர்.

1973ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து வட்டக் கழகப் பிரதிநிதியாக 1987ஆம் ஆண்டு தஞ்சை நகரக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்று 2014 வரை தொடர்ந்து 27 ஆண்டுகள் அப்பொறுப்பில் சிறப்பாகப் பணியாற்றியவர். 1

1989, 1996, 2006 ஆகிய ஆண்டுகளில் தமிழக சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற இவர், 2006 முதல் 2011 வரை தலைவர் கலைஞர் தலைமையிலான அமைச்சரவையில் வணிகவரித் துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்தார்.

இலக்கிய ஆர்வம் கொண்ட இவர், கடந்த 30 ஆண்டுகளாக இலக்கியவாதிகளைப் போற்றி வந்தவர்.

2020-ல் தலைமைக் கழகத்தின் சார்பில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் "கலைஞர் விருது" வழங்கிச் சிறப்பித்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**